Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 054 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 24.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

## கோவை சிறுமி பாலியல் வழக்கில் அனைத்து நடவடிக்கைகளும் உடனடியாக எடுக்கப்படும்; முதலமைச்சர் விஜய் உறுதி





சென்னை: கோவையில் சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில், தேவையான அனைத்து நடவடிக்கைகளும் உடனடியாக எடுக்கப்படும் என முதல்வர் விஜய் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "கோயம்புத்தூரில் நேற்று 10 வயது சிறுமிக்கு நிகழ்ந்த கொடூர சம்பவம் மிகுந்த வேதனையையும், அதிர்ச்சியையும் அளிக்கிறது. இத்தகைய மனிதநேயமற்ற மற்றும் மன்னிக்க முடியாத குற்றச் செயல்கள் நமது சமூகத்தில் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது.

தங்கள் உயிருக்குயிரான குழந்தையைப் பிரிந்து வாடும் சிறுமியின் குடும்பத்தைச் சார்ந்த சொந்தங்களுடன் எனது ஆழ்ந்த துயரத்தைப் பகிர்ந்துகொள்கிறேன்.

இந்த வழக்கில் தொடர்புடையதாக இரண்டு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவம் குறித்துத் தீவிர மற்றும் விரைவான விசாரணை மேற்கொண்டு, குற்றப்பத்திரிகையை உடனடியாக தாக்கல்செய்யத்தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள காவல்துறைக்கு உத்தரவிட்டுள்ளேன்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக நடைபெறும் இத்தகைய அராஜக செயல்களில் ஈடுபடுவோருக்கு சட்டத்தின் கீழ் கடுமையான தண்டனை பெற்றுத்தர தமிழ்நாடு அரசு உறுதியுடன் செயல்படும். இதற்கான உடனடி மற்றும் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்." இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இதனிடையே கோவையில் 10 வயது சிறுமி கடத்தி கொலை செய்யப்பட்ட நிலையில் சம்பவஇடத்திற்குநேரில் சென்று ஏடிஜிபி மகேஸ்வர் தயாள் ஆய்வு மேற்கொண்டார். சூலூர் காவல் நிலையத்தில் விசாரணை அதிகாரிகளிடம் ஏடிஜிபி விவரங்களைக் கேட்டறிந்தார். ஏடிஜிபியை தொடர்ந்து, டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் கோவை வருகை தந்துள்ளார். சம்பவ இடத்திற்கு சென்று ஆய்வு செய்து சூலூர் காவல்நிலையத்தில் உயர் அதிகாரிகளுடனும், காவல்துறையினரிடம் வழக்கு விசாரணை குறித்து ஆலோசனை நடத்தி வருகிறார்.

10 வயது சிறுமி கடத்தி கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் மற்றொரு திடுக்கிடும் தகவல் வெளியாகி உள்ளது. தென்னந்தோப்பில் வைத்து சிறுமியை கொலை செய்யப்பட்டது விசாரணையில் அம்பலமாகி உள்ளது.

இதற்கிடையே சம்பவ இடத்தில் ஏடிஜிபி மகேஸ்வர் தயாள், ஐஜி ரம்யாபாரதி நேரில் விசாரணை நடத்தினர். இதில் சம்பவத்தில் தொடர்புடைய கார்த்தி, 33, சிறுமியின் குடும்பத்தினர் வசிக்கும் அதே காம்பவுண்டில் வாடகைக்கு குடியிருந்தவன் என்று தெரியவந்துள்ளது. ஒரு வாரத்துக்கு முன் வீட்டை காலி செய்து விட்டு அந்த நபர் வேறு வீட்டுக்கு குடி பெயர்ந்துவிட்டான். இதனால் சிறுமியுடன் அந்த கார்த்திக்கு அறிமுகம் இருந்துள்ளது.

அதனால் தான் அழைத்தவுடன் பைக்கில் சென்றுள்ளார். இப்படி அழைத்துச்சென்ற சிறுமியை அவன் கொடூரமாக கொலை செய்துள்ளது தெரியவந்துள்ளது. சிறுமியின் உடலை பார்த்த உறவினர்கள், முகம் சிதைக்கப்பட்டுள்ளதாக கூறி கதறி அழுதது பார்ப்போரை கண்கலங்க வைத்தது.

சிசிடிவி காட்சிகளை பார்த்தபோது மகளை அழைத்து சென்றது யார் என தெரிய வந்தது. மகளை அழைத்து சென்றவர் பக்கத்துவீட்டில் வசித்து அண்மையில் காலி செய்தவர். மிட்டாய் வாங்கி கொடுத்து மகளை அழைத்து சென்றுள்ளனர். தெரிந்தவர் என்பதால் அவருடன் தனது மகள் சென்றார். மாலை 5 மணிக்கு கடைக்கு செல்வதாக கூறிவிட்டு மகள் சென்றாள். கைது செய்யப்பட்டவரே எங்களுடன் சேர்ந்து மகளை தேடினார். கடைக்கு சென்ற மகள் திரும்பிவராததால் தேடினோம். என அவரது தாய் கண்ணீர்மல்க கூறியுள்ளார்.

## "கோவை சிறுமி கொலை வழக்கில் காவல்துறை துரிதமாக செயல்படவில்லை" எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு



சென்னை: கோவை மாவட்டம் சூலூர் அருகே சிறுமி காணாமல்போனசில மணி நேரத்திலேயே புகார் அளிக்கப்பட்ட போதிலும் துரித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என குற்றம் சாட்டியுள்ள எடப்பாடி பழனிசாமி, சட்டம்–ஒழுங்கு மற்றும் நிர்வாக திறனில் உள்ள குறைபாடுகளையே இது காட்டுவதாக விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், "கோவை மாவட்டம் சூலூர் அருகே 10 வயது சிறுமி கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கும் சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. அந்த சிறுமி உயிரிழப்பதற்கு முன்பு பாலியல் துன்புறுத்தலுக்கும் ஆளாகியிருக்கலாம் என்ற தகவல்கள் வெளியாகி மக்களிடையே மேலும் அச்சத்தையும் கோபத்தையும் உருவாக்கியுள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய இந்த அரசு, இத்தகைய கொடூர சம்பவங்களைத் தடுக்கத் தவறியது வேதனைக்குரியது.

சிறுமி காணாமல் போன சில மணி நேரத்திலேயே புகார் அளிக்கப்பட்டிருந்த போதிலும், துரிதமான நடவடிக்கை எடுக்கப்படாதது சட்டம்–ஒழுங்கு மற்றும் நிர்வாக திறனில் உள்ள குறைபாடுகளை வெளிக்காட்டுகிறது.

பல மணிநேர போராட்டத்திற்கு பிறகு இந்த சம்பவத்தில் தொடர்புடையதாக இருவர் கைது செய்யப்பட்டிருந்தாலும், ஒரு ஏதுமறியா சிறுமியின் உயிரை காப்பாற்ற முடியாத நிலை அரசின் அலட்சியத்தையும் செயல்திறன் குறைவையும் சுட்டிக்காட்டு கிறது.

இந்த அரசு பெண்கள் பாதுகாப்பு குறித்து வெறும் விளம்பர நடவடிக்கைகளில் மட்டும் அல்லாமல், நிலையான மற்றும் பயனுள்ள பாதுகாப்பு அமைப்புகளை உருவாக்குவதிலும் தீவிரம் காட்ட வேண்டும். வெறும் ரீல்ஸ் அரசாகஅல்லாமல்ரியல் அரசாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

இந்த மனிதாபிமானமற்ற குற்றச்செயலை வன்மையாக கண்டிப்பதுடன், குற்றவாளி களுக்கு சட்டப்படி கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும், இனி இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாத வகையில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய இந்த அரசு உடனடி மற்றும் உறுதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்" என தெரிவித்துள்ளார்.

**வரி விளம்பரங்கள்**




தினத்தளம்
DHINATH DHALAM

மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள்
கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா
திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள்
ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன்
வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல்

தொடர்புக்கு : ☎ +919444082959

## தங்கம் விலை பவுனுக்கு ரூ.400 குறைவு



சென்னை: 22 காரட் ஆபாரணத் தங்கம் விலை இன்று (மே 23) பவுனுக்கு ரூ.400 என விலை குறைந்து ள்ளது. வெள்ளி விலையை பொறுத்தவரையில் இன்று சந்தையில் மாற்றமின்றி விற்பனை ஆகிறது.

சர்வதேசபொருளாதார மற்றும் அரசியல் சூழல், மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றம், கச்சா எண்ணெய் விலை, அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு, உலக பங்குச் சந்தை செயல்பாடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில் தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது.

இந்நிலையில், கடந்த 13–ம் தேதி தங்கத்தின் மீதான சுங்க வரியை 6 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக மத்திய அரசு உயர்த்தியது. அதையடுத்து அன்றைய நாளில் மட்டும் தங்கம் விலை கிராமுக்கு ரூ.670 என உயர்ந்தது. தொடர்ந்து அடுத்தடுத்த நாட்களில் தங்கம் விலை உயர்ந்தும், குறைந்தும் வருகிறது.

தங்கம் விலை குறைந்துள்ளது. சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று காலை வர்த்தகம் தொடங்கியதும் கிராமுக்கு ரூ.50 குறைந்து, ஒரு கிராம் ரூ.14,730–க்கும், பவுனுக்கு ரூ.400 குறைந்து, ஒரு பவுன் ரூ.1,17,840–க்கும் விற்பனையாகிறது. நேற்று தங்கம் விலை பவுனுக்கு ரூ.240 குறைந்தது குறிப்பிடத்தக்கது.

24 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.440 என விலை குறைந்து, ஒரு பவுன் ரூ.1,28,552–க்கும், 18 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.320 என விலை குறைந்து, ஒரு பவுன் ரூ.98,880–க்கும் விற்பனையாகிறது. வெள்ளி விலையை பொறுத்தவரையில் மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.295–க்கும், கட்டி வெள்ளி ஒரு கிலோ ரூ.2,95,000–க்கும் விற்பனை யாகிறது.

**செய்திகள்**
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# கோவை சிறுமி படுகொலையில் குற்றவாளிகளுக்கு தூக்கு தண்டனை அன்புமணி வலியுறுத்தல்



சென்னை: கோவையில் சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்து படுகொலை செய்த கயவர்களுக்கு தூக்குத் தண்டனை பெற்றுத் தர வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கோவை மாவட்டம் சூலூரை அடுத்த பள்ளப்பாளையம் பேரூராட்சியைச் சேர்ந்த 10 வயது சிறுமி அதே பகுதியைச் சேர்ந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டு, பாலியல் வன்கொடுமை செய்து படுகொலை செய்யப்பட்டிருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன. சிறுமியை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். திமுக ஆட்சியில் பெண்களும், குழந்தைகளும் சுதந்திரமாக நடமாட முடியாத நிலை இருந்தது. திமுக ஆட்சியின் ஐந்தாண்டுகளில் மட்டும் குழந்தைகளுக்கு எதிராக 27 ஆயிரம் போக்சோ சட்டப்படியான குற்றங்கள் உள்பட மொத்தம் 62 ஆயிரத்திற்கும்மேற்பட்ட குற்றங்கள் நடந்தன. அதே போன்ற நிலை இனியும் தொடராமல் அரசு பார்த்துக் கொள்ள வேண்டும்.

புதிதாக பொறுப்பேற்ற முதல்வர் விஜய் தலைமையிலான தவெக அரசு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க சிங்கப் பெண் சிறப்புப் படை உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அத்துடன் பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பில் கூடுதல்கவனம்செலுத்த வேண்டும். கோவை சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்து படுகொலை செய்த கயவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி, தூக்கு தண்டனை வழங்கப்படுவதை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும்" இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# காய்ச்சல், சளி, தொண்டை மற்றும் உடல் வலியுடன் மக்கள் அவதி: கொரோனா தொற்று பாதிப்பு காரணமா?



சென்னை: காய்ச்சல், சளி, தொண்டை வலி, உடல் வலியுடன் மக்கள் அவதிப் பட்டு வரும் நிலையில், இது கொரோ னா தொற்று பாதிப் பாக இருக்குமா என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

தமி ழகத்தில் சில வாரங்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. இதனால், உடலில் நீர்ச்சத்துஇழப்புபோன்ற பிரச்சினைகளால் ஏராளமானோர் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

பொது மக்களின் வசதிக் காக, அரசுமருத்துவ மனைகளில் ஓஆர் எஸ் கரைசல் வழங்கப் பட்டு வரு கிறது. அதேநேரம், டைபாய்டு, டெங்கு உள்ளிட்ட பல்வேறு காய்ச்சல்களால்பலர்பாதிக்கப் பட்டு அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காய்ச்சலுக்கு சிகிச்சை பெறுபவர்கள் 3 அல்லது 4 நாட்களில் குணமடைந்து வந்த நிலையில், தற்போதைய காய்ச்சல் ஒருவாரத்துக்கு மேல் ஆகியும் குணமடைய முடியாத நிலை உள்ளது.

அதுவும் குறிப்பாக, கரோனா தொற்றுக்கு இருந்ததைபோல், காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் இருமல், தொண்டை வலி, சளி தொந்தரவு, இருமல், கடுமையான உடல்வலி போன்றவைகளால் அவதிப்பட்டு வருகின்றனர். கரோனா தொற்று பரவல் தொடங்கியுள்ளதாஎன்றஅச்சம்பொது மக்களிடம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக பொது சுகாதாரத்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, "தமிழகத்தில் டெங்கு உள்ளிட்ட காய்ச்சல்களை கட்டுப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

அரசு மருத்துவமனைகளில் ஓஆர்எஸ் கரைசல் இலவசமாக வழங்கப்படுகிறது. பொதுவாக காய்ச்சல்களுக்கான அறிகுறிகள் ஒரே மாதிரிதான் இருக்கும்.கரோனா தொற்று காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் போல் தற்போது செய்வதில்லை.

தேவையானவர்களுக்கு வேண்டும் என்றால் கரோனா பரிசோதனை மேற்கொள்ளுமாறு மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது" என்றனர்.

அரசு மருத்துவர்களிடம் கேட்டபோது, "காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் கரோனா தொற்று பரிசோதனை செய்யுமாறு கேட்டால், பரிசோதனை செய்யப்படும்" என்றனர்.

# இரவு நேரங்களில் தொடரும் மின்தடை: சென்னை, புறநகர் பகுதி பொதுமக்கள் கடும் அவதி



சென்னை: சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இரவு நேரங்களில் தொடரும் மின்தடை காரணமாக பொதுமக்கள் அவதி அடைகின்றனர்.தமிழகத்தில்கடந்த சில நாட்களாக கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், கடந்த சிலநாட்களாகசென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இரவு நேரங்களில் திடிரென மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. இதனால் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

நள்ளிரவு நேரங்களில் ஏற்படும் மின்வெட்டு காரணமாக குழந்தைகள், முதியவர்கள் மற்றும் நோயாளிகள் தூக்கமின்றி தவித்து வருகின்றனர். மின்சாரம் எப்போது வரும், எப்போது போகும் என்று தெரியாத நிலை நீடிப்பதால், மறுநாள் வேலைக்கு செல்வோர் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.

மின்தடை குறித்து மின் வாரிய அலுவலகங்களைத் தொடர்பு கொண்டு புகார் அளிக்க முயன்றால், முறையான பதில்கள் அதிகாரிகளிடம் இருந்து கிடைப்பதில்லை என்றும், தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்படுவதாகவும் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். முன் சென்னையில் பெரம்பூர், ராயபுரம் உள்ளிட்ட பகுதிகளிலும் புறநகர் பகுதிகளான அம்பத்தூர், ஆவடி போன்ற பகுதிகளிலும் 2 மணி நேரம் வரை மின்சாரம் தடைப்பட்டிருந்தது.

மேலும் நேற்று முன்தினம் கொளத்தூர், வில்லிவாக்கம், தண்டையார்பேட்டை, ராயபுரம், திருவொற்றியூர், துரைப்பாக்கம், சோழிங்கநல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் மின்தடை ஏற்பட்டது.

கொளத்தூர் பகுதியில் நேற்று முன்தினம்4மணி நேரமாக மின் தடை ஏற்பட்டுள்ளதாக கூறி மக்கள் வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதே போல பல இடங்களில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இது குறித்து மின் வாரிய அதிகாரிகளிடம் கேட்டபோது, "இரவு நேரங்களில் வீடுகளில் அதிகமான ஏசி பயன்பாடு மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில்இரவுபணிபோன்ற காரணங்களால் மின் தேவை அதிகரிக்கிறது.

இதன் காரணமாக, மின் மாற்றிகள் மற்றும் வளைய சுற்று அமைப்புகளில் உள்ள டிரிப்பர் செயல்பட்டு மின்சாரம் நிறுத்தப்படுகிறது. இது குறித்து புகார் கிடைத்தவுடன் அதிகபட்சம் ஒரு மணி நேரத்தில் சரி செய்யப்பட்டு மீண்டும் மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது" என கூறினர்.

# மேகேதாட்டு அணை விவகாரம் குறித்து கருத்து: கர்நாடக துணை முதல்வருக்கு தலைவர்கள் கண்டனம்



சென்னை: 'கர்நாடக அரசு மேகேதாட்டு அணை கட்டுவதை எதிர்க்க தமிழகத்துக்கு உரிமை இல்லை' என்று அம்மாநில துணை முதல்வர் டி.கே.சிவக்குமார் தெரிவித்திருப்பதற்கு தமிழக தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்ட அறிக்கை:

அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி: டெல்டா உள்ளிட்ட பல மாவட்ட விவசாயிகள் மட்டுமின்றி 20 மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாகவும் காவிரி ஆறு விளங்கி வருகிறது.

மேகேதாட்டுவில், காவிரியின் குறுக்கே அணை கட்டினால் டெல்டா மாவட்டங்கள் பாலைவனமாகி விடும். மேகேதாட்டு அணை கட்டுவதைஎதிர்க்கதமிழக அரசுக்கு உரிமையில்லை என்ற கர்நாடக துணை முதல்வரின் பேச்சு, தமிழக விவசாயிகள் மற்றும் பொதுமக்களிடையே மிகப் பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ்விவகாரத்தில் கர்நாடக காங்கிரஸ் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை தமிழக அரசு உடனடியாக எடுப்பதுடன், அரசின் தெளிவான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும்.

மதிமுக பொதுச்செயலாளர் வைகோ: நடுவர் மன்றத்தீர்ப்பையும்,உச்ச நீதிமன்ற தீர்ப்பையும் கர்நாடக அரசு மீறுவதை அனுமதிக்கக் கூடாது. உச்ச நீதிமன்றத்தில் உள்ள வழக்கை தமிழக அரசு விரைவுபடுத்தி காவிரி உரிமையை நிலைநாட்ட வேண்டும்.

இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன்: மேகேதாட்டு அணை கட்ட புதிய விரிவான திட்டம் மத்திய அரசிடம் வழங்கப்படும் என கர்நாடக துணை முதல்வர் தெரிவித்துள்ளார். இத்தகைய முயற்சியை கர்நாடக மாநிலம் உடனடியாகக்கைவிடவேண்டும். மேகேதாட்டு அணைத் திடடத்துக்கு மத்திய அரசு அனுமதி வழங்கக்கூடாது.


பாமக தலைவர் அன்புமணி: மேகேதாட்டு அணை குறித்து கர்நாடக அரசு புதிதாகதயாரித்திருக்கும் திட்ட அறிக்கையை மத்திய நீர்வள அமைச்சகம் பெற்றுக்கொள்ளக் கூடாது.

அது மட்டுமின்றி, காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டுவதற்கான வரைவு திட்ட அறிக்கை தயாரிக்க 2018-ம் ஆண்டில் அளித்த அனுமதியை ரத்து செய்யும்படி மத்திய அரசுக்கு தமிழக அரசு அழுத்தம் தர வேண்டும்.

அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன்: காவிரியின் குறுக்கே மேகேதாட்டு அணையைக் கட்டி தமிழகத்தின் டெல்டா பகுதிகளைப் பாலைவனமாக்கும் கர்நாடக காங்கிரஸ் அரசின் முயற்சியை ஆரம்ப நிலையிலேயே முதல்வர் விஜய் தடுத்து நிறுத்த வேண்டும்.

தமாகா தலைவர் ஜி.கே.வாசன்: தமிழக அரசு உடனடியாக கர்நாடக காங்கிரஸ் அரசோடு கண்டிப்போடு பேசி மேகேதாட்டுவில் அணைகட்ட முயற்சிக்கக் கூடாது என்பதை உறுதிபடத் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

# பஞ்சாப் ஜம்மு சாலையில் கேமராக்களை பொருத்தி பாகிஸ்தானுக்கு உளவு பார்த்தவர் கைது



சண்டிகர்: பஞ்சாப் - ஜம்மு தேசிய நெடுஞ்சாலையில் சிசிடிவி கேமராக்களை பொருத்தி பாகிஸ்தானுக்காக உளவு பார்த்த இளைஞர் கைது செய்யப்பட்டார்.

நாட்டின் மிக நீளமான தேசிய நெடுஞ்சாலையான என்எச்44 காஷ்மீரின் நகரில் இருந்து கன்னியாகுமரி வரை நீண்டுள்ளது. இந்த தேசிய நெடுஞ்சாலையில் பஞ்சாப் முதல் காஷ்மீர் வரையிலான சாலையில் ராணுவ வாகனங்களின் போக்குவரத்து மிகவும் அதிகமாக இருக்கும். பாகிஸ்தானின் ஐஎஸ்எஸ் உளவாளிகள், பஞ்சாப் எல்லைக்கு உட்பட்ட என்எச் 44 நெடுஞ்சாலையில் அதிநவீன சிசிடிவி கேமராக்களைபொருத்தி பாகிஸ்தான் ராணுவத்துக்கு நேரலையாக காட்சிகளை அனுப்பி வருவதாக இந்திய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்தது. பஞ்சாப் போலீஸார் தீவிர விசாரணை நடத்தி இரு வாரங்களுக்கு முன்புமாநிலஎல்லைக்கு உட்பட்ட என்எச் 44 நெடுஞ்சாலையில் சில சிசிடிவி கேமராக்களை கண்டுபிடித்தனர்.

இவை சீனாவில் தயாரிக்கப்பட்ட சிசிடிவி கேமராக்கள் ஆகும். சூரிய ஒளியில் இயங்கக்கூடிய இந்த கேமராக்கள், பாகிஸ்தான் ராணுவத்துக்கு நேரலையாக காட்சிகளை அனுப்பி வந்திருப்பது தெரியவந்தது. இதுதொடர்பான விசாரணையைபஞ்சாப்போலீஸார் மேலும் தீவிரப் படுத்தினர். இதன்பேரில் பஞ்சாபின் பதான்கோட் அருகேயுள்ள சாக் தார்வால் கிராமத்தை சேர்ந்த பல்ஜித் சிங் (30) என்பவரை போலீஸார் கைது செய்து உள்ளனர். பஞ்சாபின் பதான்கோட் போலீஸ் எஸ்எஸ்பி தல்வீந்தர் சிங் தில்லான் நேற்று கூறியதாவது:

என்எச் 44 தேசிய நெடுஞ்சாலையின் பதான்கோட் முதல் ஜம்மு வரையிலான சாலையின் பல்வேறு பகுதிகளில் பல்ஜித் சிங்கும் அவரது கூட்டாளிகளும் அதிநவீன சிசிடிவி கேமராக்களை பொருத்தி உள்ளனர்.

இந்த கேமராக்கள் சீனாவில் தயாரிக்கப்பட்டவை. நாலாபுறமும் சுழன்று உயர்தர வீடியோக்களை எடுக்கும் திறன் கொண்டவை. சூரிய ஒளியில் இயங்கக் கூடியவை.

இந்த சிசிடிவி கேமராக்கள் மூலம் பாகிஸ்தான் ராணுவம் நேரடியாக என்எச் 44 தேசிய நெடுஞ்சாலையை உளவு பார்த்துள்ளது. குறிப்பாக இந்திய ராணுவ வாகனங்கள், மத்திய பாதுகாப்பு படைகளின் வாகனங்களின் நடமாட்டம் கண்காணிக்கப் பட்டு உள்ளது. என் எச் 44 தேசிய நெஞ் சாலையின் பாலங்கள், முக்கிய சந்திப்புகள், சில கடைகளில் அமைக்கப்பட்டிருந்த சிசிடிவி கேமராக்கள் அகற்றப் பட்டு உள்ளன. கைதான பல்ஜித் சிங்கிடம் விசாரணை நடத்தி வருகிறோம்.துபாயைசேர்ந்த சிலரின் உத்தரவின் பேரில் சிசிடிவி கேமராக்களை பொருத்தியதாக அவர் வாக்குமூலம் அளித்து உள்ளார். அவரது கூட்டாளிகள் விக்ரம்ஜித் சிங், பல்வீந்தர் சிங், தரன்பிரீத் சிங் ஆகிய 3 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது.

அவர்களை தீவிரமாக தேடி வருகிறோம். சுமார் 7 மாதங்கள் வரை சிசிடிவி கேமராக்கள் மூலம் உளவு பார்க்கப்பட்டு இருக்கலாம் என்று தெரிகிறது. பல்ஜித் சிங்குக்கு போதைபொருட்கள் கடத்தல் கும்பலுடனும் தொடர்பு இருக்கிறது. இது தொடர்பாகவும் தீவிர விசாரணை நடத்தி வருகிறோம். இவ்வாறு போலீஸ் எஸ்எஸ்பி தல்வீந்தர் சிங் தில்லான் தெரிவித்துள்ளார்.


# முற்றுகையை மீறி கடக்க முயன்ற ஈரான் கப்பலில் அதிரடி சோதனை நடத்திய அமெரிக்க கடற்படை



கடந்த பிப்ரவரி 28 ஆம் தேதி அமெரிக்கா - ஈரான் இடையே போர் மூண்ட நிலையில், இரு நாடுகளும் மாறி மாறி வான்வெளி தாக்குதல்களை நடத்தின. இந்த போரின் விளைவாக, உலகின் முக்கிய நீர்வழித் தடமான ஹார்முஸ் நீரிணையை ஈரான் மூடியது. உலகின் 20% எண்ணெய் மற்றும் எரிவாயு போக்குவரத்து இந்த வழித்தடம் வழியாக நடைபெற்று வந்த நிலையில், ஈரானின் இந்த முடிவானது உலக நாடுகளிடையே எண்ணெய் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியது. உலகநாடுகள் பலவும் போரை கைவிடுமாறு வலியுறுத்திய நிலையில், ஈரானின் அணு சக்தி திட்டத்தை கைவிடுமாறு அமெரிக்கா அழுத்தம் கொடுத்து வருகிறது. இதனிடையே ஈரானின் நட்பு நாடுகளுக்கு மட்டும் ஹார்முஸ் நீரிணை வழியாக செல்ல கணிசமான கட்டணத்தை வசூலித்துக் கொண்டு ஈரான் அனுமதி அளித்தது.இதற்குஎதிர்ப்பு தெரிவிக்கும் விதமாகவும், ஈரானை கட்டுப்பாட்டில் கொண்டு வரும் விதமாகவும், ஈரான் துறைமுகங்கள் மீதும், மத்திய கிழக்கிலிருந்து அப்பாலுள்ள ஈரானிய கப்பல்கள் மீது அமெரிக்கா முற்றுகையை அமல்படுத்தி இருக்கிறது.

இதனைத் தொடர்ந்து அமெரிக்க கடற்படையானது ஈரானுக்கு செல்லும் கப்பல்களை தடுத்து நிறுத்தி சோதனையிட்டு வருகிறது. இரு நாடுகளும் ஹார்முஸ் நீரிணையில் தங்களது பிடியை வலுப்படுத்தியுள்ள நிலையில், 87 நாடுகளைச் சேர்ந்த 1550 கப்பல்கள் தற்போது பாரசீக வளைகுடாவில் சிக்கியுள்ளன. உலகளவில் பெட்ரோல் விலை விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்திருப்பதையும், உலகளாவிய எரிசக்தி சந்தையானது கடும் அதிருப்தியில் இருப்பதையும் கருத்தில்கொண்டு அதிபர் டிரம்ப் இந்த போரிலிருந்து விலகுமாறு சக குடியரசு கட்சியினர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

# அபிஷேக நேரத்திலும் சாமானிய பக்தர்களுக்கு ஏழுமலையான் தரிசனம்



கோடை விடுமுறை முடியவிருக்கும் நிலையில்,திருமலையில் ஏழுமலையானை தரிசிக்க பக்தர்களின் கூட்டம் அலைமோதுகிறது. விஐபி பிரேக் தரிசனத்துக்கான சிபாரிசு கடிதங்களை ரத்து செய்து, அந்த நேரத்தையும் சாமானிய பக்தர்களுக்கு தேவஸ்தானம் ஒதுக்கியுள்ளது.

என்றாலும் கடந்த 4 நாட்களாக பக்தர்களின் கூட்டம் கட்டுக்கடங்காமல் உள்ளது. தற்போது சனி, ஞாயிறு வார இறுதி நாட்களில்திருமலையில் பக்தர்கள் கூட்டம் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் தேவஸ்தான கூடுதல் நிர்வாக அதிகாரி வெங்கைய்ய சவுத்ரி நேற்று திருமலையில் கூறியதாவது:

ஏஐ கட்டுப்பாட்டு அறை மூலம் கண்காணித்து 7 மணி முதல் 8 மணி நேரத்துக்குள் பக்தர்கள் சுவாமியை தரிசிக்க ஏற்பாடு செய்கிறோம். இதன் மூலம் தினமும் 15,000 கூடுதல் பக்தர்கள் சுவாமியை தரிசிக்கின்றனர்.

முதல்முறையாக சாதாரண நாளான கடந்த வியாழக்கிழமை 79,603 பக்தர்கள் சுவாமியை தரிசித்தனர். இது ஒரு சாதனை அளவாகும். இதில் அபிஷேக நேரத்திலும் 5,850 சாமானிய பக்தர்கள் சுவாமியை தரிசிக்க அனுமதிக்கப்பட்டனர். இவ்வாறு வெங்கைய்ய சவுத்ரி கூறினார்.

# மேற்கு வங்கத்தில் பிரதமர் மோடிக்கு பேல்பூரி விற்றவருக்கு பாகிஸ்தான், வங்கதேசத்தில் இருந்து கொலை மிரட்டல்



ஜார்கிராம்: மேற்கு வங்க தேர்தல் பிரச்சாரத்தின் போது, பிரதமர் மோடிக்கு பேல்பூரி விற்ற நபருக்கு பாகிஸ்தான் மற்றும் வங்கதேசத்தில் இருந்து வெடிகுண்டு மிரட்டல் வருவதாக புகார் அளிக்கப்பட்டுள்ளது.

மேற்குவங்க தேர்தலை முன்னிட்டு, ஜார்கிராம் நகரில் பிரதமர் மோடி கடந்த மாதம் 19-ம் தேதி பிரச்சாரம் செய்தார். அப்போது சாலையோர கடை ஒன்றில் பிரதமர் மோடி பேல் பூரி வாங்கினார்.

அந்த கடையில் இருந்த விக்ரம் சாவோ என்பவர் பிரதமர் மோடிக்கு மசாலா பொரி, வெங்காயம், மிளகாய், கடுகு எண்ணெய் ஆகியவை கலந்த பேல்பூரி செய்து கொடுத்தார். இந்த வீடியோ சமூக ஊடகங்களில் வேகமாக பரவியதால், விக்ரம் சாவோ மற்றும் அவரது கடை பிரபலம் அடைந்தது.

இந்நிலையில் தனது செல்போனுக்கு பாகிஸ்தான் மற்றும் வங்கதேசத்திலிருந்து மர்ம நபர்கள் வீடியோ அழைப்பு மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுப்பதாக விக்ரம் சாவோ புகார் தெரிவித்துள்ளார்.

கூறியிருப்பதாவது: எனக்கு பாகிஸ்தான் மற்றும் வங்கதேசத்திலிருந்து மர்ம நபர்களிடமிருந்து வீடியோ அழைப்பு மற்றும் வாட்ஸ் ஆப் தகவல்கள் வருகின்றன.

முதலில் வாழ்த்து தெரிவிக்கும் அவர்கள், பின்னர், நீ இன்னும் உயிரோடு இருக்கிறாயா? உன்னை குண்டு வைத்து தகர்த்துவிடுவோம் என மிரட்டுகின்றனர்.

அவர்கள் பிரதம ருடனான தொடர்பு குறித்து கேட்கவில்லை. ஆனால், பிரதமர் என்னை சந்தித்த பின்பே எனக்கு இந்த மிரட்டல்கள் வருகின்றன. இவ்வாறு விக்ரம் சாவோ தெரிவித்தார். இது குறித்து விசாரணை நடத்தி வரும் போலீஸார், விக்ரம் சாவோ குடும்பத்துக்கு போலீஸ் பாதுகாப்பு அளித்துள்ளனர்.

# அரசுத் துறைகளில் 100க்கும் மேற்பட்ட குறுகிய கால டெண்டர்கள் ரத்து



சென்னை: தமிழக அரசின் பல்வேறு துறைகளில்விடப்பட்ட 100-க்கும்மேற்பட்ட குறுகிய கால டெண்டர்களை ரத்து செய்து அரசு உத்தர விட்டுள்ளது.

தமிழகத்தில் தவெக ஆட்சி அமைந்ததும், அரசின் பல்வேறு துறைகளில் கடந்த மே 13 முதல் பல்வேறு குறுகியகால டெண்டர்கள் விடப்பட்டன.

இதற்கு பொதுமக்கள் மத்தியிலும், ஒப்பந்ததாரர்கள் மத்தியிலும் கடும் எதிர்ப்பு கிளம்பியது. இது தொடர்பாக அரசின் கவனத்துக்கு வந்த நிலையில், ஏற்கெனவே சென்னை மாநகராட்சி மற்றும் ஊரக வளர்ச்சிதுறையில் குறுகிய கால டெண்டர் வெளியிட்ட அதிகாரிகள் சஸ்பென்ட் செய்யப்பட்டனர்.

அதன் தொடர்ச்சியாக குறுகிய டெண்டர்கள் மூலம் பணிகளை மேற்கொள்ள கூடாது என்று அரசு அறிவுறுத்தி இருந்தது.அதன் காரணமாக, ஊரக வளர்ச்சித் துறை, போக்குவரத்து துறை, பொதுப்பணித்துறை, மின் துறை, சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் கடந்த மே 13 முதல் 22-ம் தேதி வரை போடப்பட்ட 100-க்கும் மேற்பட்ட குறுகிய கால டெண்டர்கள் நிர்வாக காரணங்களுக்காக ரத்து செய்து அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

# வேலையில்லாத இளைஞர்களுக்கு உதவித்தொகை எப்போது? அமைச்சர் முஹமது பர்வேஸ் விளக்கம்



புதுக்கோட்டை: தேர்தல் அறிக்கையில் அளித்த முக்கிய வாக்குறுதிகளில் ஒன்றான வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்களுக்கு மாநத்தோறும் உதவித்தொகை வழங்குவது கு றி த் து மு த ல மை ச் ச ரு ட ன் கலந்து பேசி முடிவு எடுக்கப்படும் என தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் முஹமது பர்வேஸ் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சராக பொறுப்பேற்ற முஹமது பர்வேஸ், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்ட ஆட்சியர் அருணா மற்றும் அரசு அதிகாரிகளோடு வளர்ச்சித்திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இதன் பின்னர் அவர் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அமைச்சர் முஹமது பர்வேஸ், "மாவட்டத்தின் உள்ள அரசு பள்ளிகளில் அடிப்படை வசதிகள் குறிப்பாக சுகாதாரமான கழிப்பறைகள், குடிநீர் வசதிகள் உள்ளனவா? என்பது குறித்து கல்வித் துறை அதிகாரிகளோடு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் மாவட்டத்தில் இதுவரை நடைபெற்று வரும்பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கடந்த ஆட்சி காலத்தில் அவர்கள் சரியாக திட்டங்களை செயல்படுத்தினார்களா? இல்லையா? என்பது குறித்து ஆராய்வதை விட நாம் என்ன புதிதாக செய்யப் போகிறோம்? என்பது குறித்து ஆலோசனை நடத்தி திட்டங்களை நிறைவேற்றுவேன். வேலைவாய்ப்புத் துறையின் இணையதளம் சரியாக வேலை செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு கடந்த ஆட்சி காலத்தில் இருந்தது. அது தொடர்பாக தற்போது தமிழக முழுவதும் அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். நேற்று சென்னையில் ஆய்வு நடத்தினோம்.

வேலைவாய்ப்பு துறை இணைய தளத்தில் எளிதாக பதிவு செய்வதற்கு உண்டான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும்.

தேர்தல் அறிக்கையில் கூறியபடி, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு உதவித்தொகை வழங்குவது குறித்து முதலமைச்சருடன் கலந்து பேசி முடிவு எடுக்கப்படும்.

தமிழகத்தில் குழந்தை தொழிலாளர்கள் உள்ளனரா? என்பது குறித்து அனைத்து நிறுவனங்கள், தொழிற்சாலைகளில் ஆய்வு மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. குழந்தை தொழிலாளர்கள் முறை முற்றிலுமாக ஒழிக்கப்படும்.

அதே போன்று சிறு குறு நிறுவனங்களில் தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதிகள், அடிப்படை சம்பளம் கொடுக்கப்படுகிறதா? என்பது குறித்தும் ஆய்வு மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த அரசு இளைஞர்களால் உருவாக்கப்பட்டது. எனவே இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும், அவர்களுக்கு முறையான வேலைவாய்ப்பு கிடைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு வேலைக்கு தொழிலாளர்கள் செல்வதைத் தடுக்க சொந்த மாவட்டத்திலேயே தொழிற்சாலைகள் தொடங்கி அவர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கைஎடுக்கும்" என்றார்.


மேலும், தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் மின்தடை நிலவுவது குறித்த கேள்விக்கு பதில் அளித்த அவர், "படிப்படியாக துறை சார்ந்த அமைச்சர் நடவடிக்கை எடுத்து வருகிறார். புதுக்கோட்டை மாவட்டத்திலும் மின் தடை ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது" என்றார்.

தேர்தல் அறிக்கையில் தவெக கூறியது என்ன?

வேலை கிடைக்காமல் இருக்கும் பட்டதாரி இளைஞர்களுக்கு மாதம் ரூ. 4,000 உதவித்தொகை வழங்கப்படும் என்று தனது தேர்தல் அறிக்கையில் தவெக வாக்குறுதி அளித்தது.

மேலும், டிப்ளமோ, ஐ.டி.ஐ மற்றும் 12-ஆம் வகுப்பு முடித்து வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர்களுக்கு மாதம் ரூ. 2,500 உதவித்தொகை வழங்கப்படும் என்றும் தெரிவித்திருந்தது.






# கொலை மிரட்டல் தொடர்ச்சியாக விடுக்கப்படுகிறது: கரப்பான்பூச்சி ஜனதா கட்சி நிறுவனர் புகார்

புதுடெல்லி: தொடர்ச்சியாக கொலை மிரட்டல்கள் விடுக்கப்ப டுகின்றன என்று கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் நிறுவனர் அபிஜித் தீப்கே தெரிவித்துள்ளார்.

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் அண்மையில் கூறும்போது, "வேலையில்லாத சில இளைஞர்கள் கரப்பான்பூச்சிகளை போல, ஒட்டுண்ணிகளைபோல சமூக வலைதளங்களில் எல்லோரையும் தாக்குகின்றனர்" என்று குறிப்பிட்டார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும்வகையில் அமெரிக்காவின் பாஸ்டன் பல்கலைக்கழகத்தில் பயிலும் இந்திய மாணவர் அபிஜித் தீப்கே, கடந்த 16-ம் தேதி "காக்ரோச் ஜனதா கட்சியை" (கரப்பான்பூச்சி ஜனதா கட்சி) சமூக வலைதளங்களில் தொடங்கினார். இந்த கட்சியில் லட்சக்கணக்கானோர் இணைந்து வருகின்றனர். இதுதொடர்பான சமூக வலைதளங்களை 2 கோடிக்கும் மேற்பட்டோர் பின்தொடர்கின்றனர்.

இந்த சூழலில் அபிஜித் தீப்கே சமூகவலைதளத்தில் வெளியிட்ட பதிவில், "ஆன்லைனில் புதிய கட்சியை தொடங்கிய பிறகு சமூக வலைதளங்கள் வாயிலாக எனக்கு தொடர்ச்சியாக கொலை மி ர ட் ட ல் க ள் வி டு க் க ப் ப டு கி ன் ற ன. இது ஏற்கெனவே எதிர்பார்த்த ஒன்றுதான். எங்களது கட்சி சார்பில் முதல் கோரிக்கையை முன்வைக்கிறோம். நீட் வினாத்தாள் கசிவுக்கு பொறுப்பேற்று மத்திய கல்வி அமைச்சர் பதவி விலக வேண்டும். இதுதொடர்பான ஆன்லைன் மனுவில் பொது மக்கள் கையெழுத்திட வேண்டுகிறேன். அரசுநிர்வாகத் தவறுகள் குறித்து மக்கள் கேள்வி எழுப்ப வேண்டும்." என்றார்.


பெற்றோர் கருத்து: அபிஜித் தீப்கேவின் பெற்றோர் பகவான், அ னி த ா மகாராஷ்டிராவின் சத்ரபதி சாம்பாஜிநகரில் வசிக்கின்றனர். அவர்கள் கூறியதாவது:

எனது மகன் அபிஜித் அரசியலில் நுழைவதை ந ா ங் க ள் விரும்பவில்லை. அவர் ஆன்லைனில் கரப்பான்பூச்சி ஜனதா கட்சியை தொடங்கிய நாள் முதல் எங்களது தூக்கத்தை தொலைத்துவிட்டோம்.

புதிய கட்சிக்கு சமூக வலைதளங்களில் ஆதரவு பெருகி வருவதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன. இதில் எங்களுக்கு எந்த மகிழ்ச்சியும் இல்லை. எங்கள் மகன் இந்தியா திரும்பினால் கைது செய்யப்படுவார் என்று அஞ்சுகிறோம். இந்தியாவில் இருந்தபோது ஆம் ஆத்மியில் சிறிது காலம் எங்களது மகன் பணியாற்றினார். அப்போதே நாங்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தோம். இவ்வாறு பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

காங்கிரஸ் எம்பி சசி தரூர் கூறும்போது, "கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் திடீர் வளர்ச்சி வியப்பளிக்கிறது. அதன் சமூக வலைதள பக்கங்களை முடக்கக் கூடாது. இளைஞர்கள் கருத்துகளை வெளிப்படுத்த வாய்ப்பளிக்க வேண்டும். ஜனநாயகத்தில் அனைவரும் கருத்துகளை தெரிவிக்க உரிமை உள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

# எவரெஸ்ட் சிகரத்தில் இருந்து இறங்கும் போது 2 பேர் உயிரிழப்பு



காத்மாண்டு: எவரெஸ்ட் சிகரத்தில் இருந்து இறங்கும் போது அருண் குமார் திவாரி, சந்தீப் அரே என்ற 2 இந்தியர்கள் உயிரிழந்தனர். உலகின் மிக உயரமான எவரெட்ஸ் சிகரத்தை சந்தீப் அரே புதன்கிழமையும் அருண் குமார் தி வாரி வியாழக்கிழமை மாலையும் அடைந்துள்ளனர்.

பின்னர் கீழே இறங்கும் போது 4 ஷெ ர்பா வழி காட்டிகளின் உதவியுடன் வ ந் து கொண்டி ருந்த திவாரி 'ஹிலாரி ஸ்டெப்' ப குதிக்கு அருகே உயி ரிழந்தார். சந்தீப் அரே உ டல் நலக் கு றைவுக்கு பி ற கு ஷெர்பா மீட்புக் கு ழுவின ரால் கீழே கொண்டு உயிரிழந்தார்.

21 வய தான சானிகா ஷா ம ற்றும் எல்லைப் பாதுகாப்பு படையின் அனை த்து பெண் மலை யேற்றக் குழுவினர் உள் ளி ட்ட பல இந்தியர்கள் வெற் றிக ரமாக எவரெஸ்ட் சிகரத்தை அடைந் த நிலை யி ல் இந்த மரணங் க ள் நிகழ்ந்துள் ளன. இந்த ஆண்டு மலை யேற்றப் பருவம் தொடங் கிய பிறகு நேபாளத்தின் தெற்கு அடிவார முகாமி ல் இருந்து சாதனை அ ளவா க 2 7 4 மலை யே ற்ற வீ ரர்கள் புதன் கிழமை ஒ ரே நாளில் எ வ ரெஸ்ட் சிகரத்தை அடைந்துள்ளனர்.

இந்த ஆ ண்டு எவரெஸ்ட் சிகரத்தில் ஏற நேபாள அதிகாரி கள் 493 அ னுமதிகளை வழங்கி யுள்ள நிலையில் இது சா தனை ஆண்டாக அ மையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1953-ல் டென்சிங் நார்கே, சர் எட்மண்ட் ஹிலாரி ஆகியோர் முதன்முறையாக எவரெஸ்ட் சிகரத்தை வெற்றிகரமாக அடைந்ததிலிருந்து, ஒரே ஆண்டில் வழங்கப்பட்ட அதிகபட்ச அனுமதி இதுவாகும்.

# பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு 5 மணி நேரத்தில் ரூ. 4 கோடிக்கு ஆடுகள் விற்பனை: களைகட்டிய எட்டயபுரம் சந்தை

தூத்துக்குடி: புகழ் பெற்ற எட்டயபுரம் ஆட்டுச் சந்தையில் ஒரே நாளில் (சுமார் 5 மணி நேர சந்தையில்) 4 கோடி ரூபாய் வரை ஆடுகள் விற்பனையாகின.

தென் மாவட்டங்களில் உள்ள புகழ்பெற்ற ஆட்டுச் சந்தைகளில் தூத்துக்குடி மாவட்டத்தின், எட்டயபுரம் ஆட்டுச்சந்தையும் ஒன்று. இந்த ஆட்டுச் சந்தை ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைதோறும் நடைபெறும்

.இங்கு தூத்துக்குடி மட்டுமின்றி அதன் சுற்றுவட்டார மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர்,

ராமநாதபுரம், தேனி, மதுரை, கோவை, சிவகங்கை, சென்னை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஆட்டு வியாபாரிகளும், பொதுமக்களும் வருவது வழக்கம்.

மேலும், ஒவ்வொரு வாரமும் ரூ.2 கோடி வரையிலும், பண்டிகை நாள்களில் ரூ.3 கோடி முதல் ரூ.7 கோடி வரையிலும் இங்கு வர்த்தகம் ஆகும். இந்த நிலையில், இஸ்லாமியர்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றான பக்ரீத் வருகின்ற மே 28 ஆம் தேதி ( வி ய ா ழ க் கி ழ மை ) கொண்டாடப்பட உள்ளது.

ஆகையால், இந்த வார ஆட்டுச் சந்தையில் ஆடு விற்பனை வழக்கத்தை விட சற்றே கூடுதலாக சூடுபிடித்துக் காணப்பட்டது. வியாழக்கிழமை மாலை முதலே வியாபாரிகள் சந்தைக்கு வரத் தொடங்கி விட்டனர். இருந்தபோதிலும், (மே 23) தான் சந்தை களை கட்டியது.

குறிப்பாக, வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் கூட்டம் அலைமோதியதால், சந்தையே விழாக்கோலம் பூண்டது போல் காட்சியளித்தது. சந்தையில் வெள்ளாடு மற்றும் செம்மறி ஆட்டுக்கிடாய்கள் வரத்து அதிகமாக இருந்தது. பொட்டு, மயிலை, நாடு, செம்மறி என பல ரகங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்துக்கும் அதிகமான ஆடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன.

10 கிலோ முதல் 35 கிலோ வரையிலான ஆடுகள் ரூ. 12 ஆயிரம் முதல் ரூ. 40 ஆயிரம் வரையிலான வி லை யி ல் விற்பனையாகின. மேலும், இன்றைய சுமார் ஐந்து மணி சந்தையில் மட்டும் ரூ.4 கோடி வரையில் ஆடுகள் விற்பனையாகி உள்ளது.

இது குறித்து வியாபாரி ஒருவர் கூறுகையில், "வழக்கம் போல ஆட்டு சந்தை இன்று களை கட்டியது. விலை கடுமையாக உயர்ந்தபோதிலும் மக்கள் ஆர்வமாக வந்து வாங்கினர். கடந்த வாரங்களை விட இந்த வாரம் விலை அதிகமாகவே இருந்தது. 10 கிலோ ஆட்டுக்குட்டி சென்ற வாரம் ரூ. 7 ஆயிரம் முதல் ரூ. 8 ஆயிரத்துக்கு விற்பனையான நிலையில், இந்த வாரம் அதே அளவுள்ள ஆட்டுகுட்டி ரூ. 12 ஆயிரம் வரை விலை போனது" என தெரிவித்தார்.



# துறை மாற்றப்பட்டது ஏன்? அமைச்சர் செங்கோட்டையன் விளக்கம்

சென்னை:மாநில அரசின் நிதிச் சுமை அதிகமாக இருப்பதால் அமைச்சர் செங்கோட்டையன் துறையை மாற்றியதாக கூறப்பட்டு வரும் நிலையில், இதற்கான விளக்கத்தை அவர் வழங்கி உள்ளார்.



சென்னையில் இருந்து கோபிச்செட்டிபாளையம் செல்வதற்காக விமானம்மூலம்கோவை வந்த வருவாய்த் துறை அமைச்சர் செங்கோட்டையன், விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்தார். , "முதலமைச்சர் விஜய்யை பொருத்தவரை தமிழ்நாடு வாழ வேண்டும் என்பது தான் அவரது நோக்கம். வளர்ச்சி பாதையை நோக்கி அது பயணிக்க வேண்டும் என்பதே அவரது எண்ணம். எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் என்பது அவரது நோக்கம். ஊழலற்ற ஆட்சி அமைய வேண்டும் என்பது அவரது கனவு. மக்கள் எல்லோரும் எல்லா நலன்களையும் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் திட்டங்களை தொடர்ந்து அறிவித்துக் கொண்டு உள்ளார். ஒவ்வொரு அமைச்சர்களும் தங்கள் துறையில் சிறந்த பணிகளை ஆற்றிட வேண்டும் என்ற எண்ணத்தை முதலமைச்சர் சொல்லி இருக்கின்றார்" என்றார்.

தொடர்ந்து பேசிய அவரிடம்,ஆ.ராசா,விசிக மீது வைத்த விமர்சனம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த அவர், "காய்க்கிற மரத்துக்கு கல்லடி விழும். ஆ. ராசா இன்றைக்கு அல்ல என்றைக்குமே ஏதாவது ஒரு வார்த்தையை வீசிவிட்டு, பின்னர் வருந்துவார். மக்கள் அதைப் பற்றி கவலைப்படுவதில்லை. அவருடைய எண்ணங்கள் தூய்மையாக இல்லை என்பது அவரின் கருத்தின் மூலம் தெரிகிறது. எங்களைப் பொருத்தவரை இதற்கெல்லாம் பதில் அளிக்க நேரமில்லை. முதலமைச்சரின் அறிவுறுத்தலின்படி, மக்களுக்காக இரவு, பகல் பாராமல் பணியாற்ற உள்ளோம்" என தெரிவித்தார்.

மேலும், அவரிடம் நிதி அமைச்சர் பொறுப்பு மாற்றப்பட்டது குறித்தும் கேள்வி கேட்கப்பட்டது. இதற்கு பதிலளித்த அமைச்சர் செங்கோட்டையன், "இந்த கேள்வியை நீங்கள் கேட்க கூடும் என தெரியும். மக்களோடு மக்களாக இருந்து பணிகளை ஆற்ற வேண்டும் என விரும்புகிறேன். நிதி துறையை பொறுத்தவரை என்னுடைய பணிகள் முழுமையாக சென்னையில் இருந்து மட்டுமே ஆற்ற வேண்டிய சூழல் ஏற்படும். மக்கள் பணி என்பது வருவாய்த்துறை மூலமாக எல்லா நலத்திட்ட பணிகளையும் உருவாக்க முடியும் என்பதால் என்னுடைய நிலையில் இருந்து முதலமைச்சரிடம் வேண்டுகோள் வைத்தேன். அந்த வேண்டுகோளின் அடிப்படையில் வருவாய்த் துறை அமைச்சராக மாற்றப்பட்டேன்" என விளக்கமளித்தார்.

இத்துடன், நிதிச் சுமை அதிகமாக இருப்பதால் அந்த பொறுப்பை நீங்கள் வேண்டாம் என சொன்னதாக கூறப்படுகிறதே என்று கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு, "உங்களின் கருத்துகளுக்கு எல்லாம் பதில் அளிக்க முடியாது. என்னுடைய உள்ளத்தில் இருப்பதையே முதலமைச்சரிடம் சொன்னேன். அவர் அதை மாற்றித் தந்துள்ளார்" என்று கூறினார்.

நிறைவாக, பெட்ரோல் மற்றும் டீசல் பயன்பாடு குறித்து பிரதமர் மோடி பொதுமக்களுக்கு அளித்த அறிவுறுத்தல் குறித்து அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குபதிலளித்தஅவர், "பிரதமர் அளவிற்கெல்லாம் போகாதீர்கள். இதற்கெல்லாம் பதில் சொல்வது சரியாக இருக்காது. எங்கேயோ ஒரு முடிச்சை போட வேண்டும், சிக்கலை போட வேண்டும் என நீங்கள் கருதுகின்றீர்கள். அதற்குள் சிக்க கூடியவன் செங்கோட்டையன் அல்ல" என கூறி அங்கிருந்து புறப்பட்டார்.



# கேரளாவிற்கு கனிம வளங்களை கொண்டு சென்றால் என்ன தவறு? அனிதா ராதாகிருஷ்ணன் சர்ச்சை பேச்சு

கன்னியாகுமரி: தமிழ்நாட்டிலிருந்து கேரளாவிற்கு கனிம வளங்களை கொண்டுசென்றால் என்ன தவறு? கேரளா என்ன துபாயிலா இருக்கிறது? என திமுக முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் கேள்வியெழுப்பி சர்ச்சையை கிளப்பியுள்ளார். கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறும் கட்டுமானம் மற்றும் சாலை பணிகளுக்கான மூலப்பொருட்களான பாறை பொடி, ஜல்லி போன்றவை வாகன சோதனையால் இரண்டு முதல் நான்கு நாட்கள் வரை நிறுத்தப்படுகிறது. இதனால் பொருட்களின் விலைஉயர்கிறது.எனவே உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென திமுக எம்.எல்.ஏக்கள் அனிதா ராதாகிருஷ்ணன் (திருச்செந்தூர் தொகுதி) மற்றும்ஆஸ்டின்(நாகர்கோவில் தொகுதி) ஆகியோர் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரிடம்மனுஅளித்தனர்.

அதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது பேசிய அனிதா ராதாகிருஷ்ணன், "சட்டம் என்பது மக்களை பாதிக்காமல்இருப்பதற்குதானே தவிர, தொழிலை முடக்கி லாரி தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதற்கு அல்ல. இங்குள்ள அதிகாரிகள் முறையாக ஆய்வு செய்யவேண்டும். 4 நாட்களாக நாங்கள் இங்கே நின்று கொண்டிருக்கிறோம் என்று தூத்துக்குடியில் உள்ள லாரி ஓட்டுநர்கள் என்னிடம் கண்ணீர் மல்க கோரிக்கை வைத்தனர்.

ஆரல்வாய்மொழியில் எடை மேடை அருகே சுமார் 200க்கும் மேற்பட்ட லாரிகள் வரிசையாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. இந்த லாரிகள் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களிலிருந்து கனிம வளங்களை ஏற்றிக்கொண்டு கட்டுமான பணிகளுக்காக கொண்டு செல்லப்படுகிறது. இந்த லாரிகள் நாள்க்கணக்காகஅங்குநிறுத்திவைக்கப்படுவதால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். விலையும்அதிகரிக்கிறது.

எனவே, உடனடியாக அந்த லாரிகள் அனைத்தும் அங்கிருந்து செல்ல மாவட்ட நிர்வாகம் அனுமதி வழங்க வேண்டுமென ஆட்சியரிடம் மனு அளித்திருக்கிறோம்" என்றார்.

அவரிடம், கன்னியாகுமரிமாவட்டத்தில்இருந்து கனிமவளங்கள்கேரளாவிற்கு கடத்தப்படுவதை தடுப்பதற்காகத்தானே கனிமவள லாரிகள் தடை செய்யப்பட்டுள்ளது என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியதற்கு, "கேரளாவுக்கு கனிம வளங்களை கொண்டு சென்றால் என்ன தவறு? கேரளா என துபாயிலா இருக்கிறது?இந்தியாவில் தானே இருக்கிறது? எல்லா பொருளும் அங்கேயும் போகும். இங்கேயும் வரும்" என்று பதிலளித்தார். அதற்கு செய்தியாளர், ஆனால் கேரளாவிலிருந்து கனிம வளங்களை தமிழகத்திற்கு கொண்டுவர இயலாதே என்று கேட்டபோது, "அது அவர்கள் தவறு. அந்த தவறை நாம் செய்யக்கூடாது" என்றார்.அவரைத்தொடர்ந்து பேசிய நாகர்கோவில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆஸ்டின், "குமரி மாவட்டத்தில் நடைபெறும் கட்டுமான பணிகளுக்கும், சாலைப் பணிகளுக்கும் மூலப்பொருட்களான பாறை பொடி,ஜல்லி போன்றவை நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களிலிருந்து விதிகளுக்குட்பட்டு கொண்டு வரப்படுகின்றன.


ஆனால், சில மாதங்களுக்கு முன்பு நெல்லை-குமரி மாவட்டத்துக்கு இடையே சோதனை சாவடி அமைத்தனர். அதன்பிறகு அந்த வழியாக கட்டுமான பொருட்கள் கொண்டு வரும் லாரிகள் சோதனை என்ற பெயரில் தடுத்து நிறுத்தப்படுகின்றன. இதனால் 2 முதல் 4 நாட்கள் வரை லாரிகள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கட்டுமான பொருட்களின் விலை உயர்கிறது.

கடந்த திமுக ஆட்சியில் அமைச்சர் தலைமையிலான கூட்டத்தின்போது, அதிக பாரம் ஏற்றிவரும் லாரிகளைத் தான் சோதனை செய்யவேண்டுமென அப்போதைய அமைச்சர்கூறியிருந்தார். ஆனால், தற்போது அனைத்து லாரிகளும் சோதனைக்கு உட்படுத்தப்படுவதால், நாள்க்கணக்கில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதிக பாரம் ஏற்றிவந்து விபத்தை ஏற்படுத்தும் லாரிகளை அனுமதிக்க வேண்டும் என்பது எங்களது கோரிக்கை அல்ல. உரிய ஆவணங்கள் வைத்திருக்கும் லாரிகளை காலம் தாழ்த்தாமல் அனுமதிக்க வேண்டும் என்று தான் வலியுறுத்துகிறோம்" என்று தெரிவித்தார்.

# 10 நாட்களுக்குள் 3வது முறையாக உயர்ந்த பெட்ரோல், டீசல் விலை லிட்டர் எவ்வளவு?

சென்னை: பெட்ரோல், டீசல் விலை 10 நாட்களுக்குள் 3-வது முறையாக உயர்த்தப்பட்டிருக்கிறது. சி.என்.ஜி விலையும் கிலோவுக்கு ரூ. 1 உயர்த்தப்பட்டுள்ளது.



கச்சா எண்ணெய் விலை உயர்வு காரணமாக பெட்ரோல், டீசல் விலையானது தொடர்ந்து உயர்ந்து வருகிறது. நீண்ட நாட்களாக எரிபொருள் விலை உயர்த்தப்படாமல் இருந்த நிலையில்,எண்ணெய் நிறுவனங்களின் பெரும் இழப்பை கருத்தில் கொண்டு பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்பட்டு வருகிறது.

மே 15 ஆம் தேதி பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு ரூ. 3 உயர்ந்த நிலையில், அடுத்த 5 நாட்களுக்குள் மீண்டும் 90 பைசா அதிகரிக்கப்பட்டது. இந்நிலையில் இன்று மீண்டும் 3-வது முறையாக கிட்டத்தட்ட 91 பைசா அதிகரிக்கப்பட்டுள்ளது.

இன்னும் அடுத்தடுத்த நாட்களில் பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு ரூ. 15 வரை உயரலாம் என்று அஞ்சப்படுகிறது.

சென்னையில் பெட்ரோல் விலை 82 பைசா உயர்த்தப்பட்டு ஒரு லிட்டர் ரூ. 105.31-க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதேபோல் டீசல் விலையும் 87 பைசா உயர்ந்து ஒரு லிட்டர் ரூ. 96.98-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த 15 ஆம் தேதி சென்னையில், பெட்ரோல் விலை 82 பைசா அதிகரித்து ஒரு லிட்டர் ரூ. 104.49-க்கும், டீசல் விலை 86 பைசா அதிகரித்து ஒரு லிட்டர் ரூ. 96.11-க்கும் விற்பனை செய்யப்பட்டது. முன்னதாக, 15 ஆம் தேதி பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ. 2.83 அதிகரித்து, ரூ. 103.67-க்கும், பெட்ரோல் விலை ரூ.2.86 அதிகரித்து ஒரு லிட்டர் ரூ. 95.25-க்கும் விற்பனையானது. இந்நிலையில் 10 நாட்களுக்குள் இன்று மூன்றாவது முறையாக பெட்ரோல், டீசல் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

பெட்ரோல், டீசல் விலையை போன்றே இன்று சி.என்.ஜி விலையும் கிலோவுக்கு ஒரு ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசு பெட்ரோல், டீசல் விலையில் பெரிய மாற்றம் செய்யாமல் இருந்து வந்தது. ஆனால் தற்போது உலகளவிலான கச்சா எண்ணெய் தட்டுப்பாடு மற்றும் ஹார்முஸ் வழித்தடத்தில் கட்டுப்பாடு போன்றவை காரணமாகவும், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிற எண்ணெய்க்கு அதிகப்படியான கட்டணங்கள் வசூலிக்கப்படுவதாலும் பெட்ரோல், டீசல் மற்றும் கியாஸ் சிலிண்டர்களின் விலையானது உயர்த்தப்பட்டு வருகிறது.

இந்த சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு தான் பிரதமர் மோடி, முடிந்த வரை பயணங்களை தவிர்க்குமாறும், வீட்டிலிருந்தே வேலை செய்யும்படியும் அறிவுறுத்தி இருந்தார்.

இந்நிலையில் பெட்ரோல், டீசல் விலையுடன் சி.என்.ஜி விலையும் உயர்த்தப்பட்டுள்ளதால்,வாடகைக்கார் ஓட்டுநர்கள் நிதி நெருக்கடிக்கு உள்ளாகி வருகின்றனர். ஏற்கனவே, வாகன பராமரிப்பு செலவுகளும் கணிசமாக உயர்ந்திருப்பதால் சி.என்.ஜி மற்றும் எரிபொருள் கட்டண உயர்வை ரத்து செய்ய வேண்டுமென ஓட்டுநர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# Chopper crash near Leh: Injured major general poses, pilot flashes 'victory' sign in viral selfie

*Three days after an Army Cheetah helicopter carrying senior officers crashed in Ladakh, a selfie of an Army Major who survived the crash, along with his colleagues, has emerged.*

*The incident ocurred on May 20 when the Cheetah helicopter with three army officers crashed in the mountainous Tangste region near Leh. Though it happened on Wednesday, the details emerged on Friday.*

*Now a selfie has emerged showing an injured Major General Sachin Mehta posing beside the wreckage while one of the pilots flashed a 'victory' sign.*

*Crash in high-altitude region*

*The accident reportedly took place on May 20 in the mountainous Tangste region near Leh, close to the Line of Actual Control (LAC) with China. The single-engine Army Cheetah helicopter was carrying general Sachin Mehta, general officer commanding of the 3 Infantry Division, along with two pilots, a lieutenant colonel and a major, when it crashed.*

*Officials said all three occupants escaped with minor injuries and are safe and stable. They described the survival of everyone onboard as "nothing short of a miracle", given the difficult terrain and high-altitude flying conditions in the region.*

*All three escape with minor injuries*

*Officials said Army aviation operations in eastern Ladakh are particularly challenging because of steep mountainous terrain, unpredictable weather and thin air at high altitudes. The Cheetah helicopter is frequently used for transport, reconnaissance and logistics missions in forward areas along the LAC.*

*Officials said the Indian Army is also planning to phase out its ageing fleet of Cheetah and Chetak helicopters in the coming years and replace them with Light Utility Helicopters (LUH) as part of a broader modernisation drive.*


*Army plans phase-out of Cheetah, Chetak fleet*

*The Army is expected to require around 250 new helicopters and is pursuing a two-pronged strategy that includes inducting indigenously produced LUHs and leasing similar aircraft as stopgaps for critical operational needs.*

*Hindustan Aeronautics Limited (HAL), which had licence-produced hundreds of Cheetah and Chetak helicopters for the armed forces, now focuses on maintenance and overhaul of the ageing fleet.*

*Officials said that the existing fleet remains airworthy for now but has been under scrutiny due to a string of accidents in recent years. Over 15 Cheetah and Chetak helicopters have crashed in the last decade, raising concerns over safety in high-altitude operations, even as these aircraft continue to serve as a crucial lifeline for troops in remote Himalayan regions, including Siachen.*

# US walks back on some aspects after 'leave country' rule to seek Green Cards: 'National interest'



*After the US announced a new policy that curtailed a key immigration route for foreign nationals seeking a green card, the authorities have now retracted some elements, providing respite to international professionals, including Indian workers. The US Citizenship and Immigration Services (USCIS) on Friday introduced a new policy memo that changed how foreign nationals on temporary visas can apply for permanent residency or a green card. The new policy required applicants on temporary visas to return their home country and apply for green card through a US embassy or consulate, rather than allowing the category change while staying in the US. Hours after introducing the policy change, the USCIS seems to have partially retracted the changes, inserting two exceptions: "economic benefit" and "national interest". "After years of ignoring the intent of Congress in the adjustment of status application, USCIS is merely restating and reasserting that intent. While we work to operationalize this, people who present applications that provide an economic benefit or otherwise are in the national interest will likely be able to continue on their current path while others may be asked to apply abroad depending on individualized circumstances," USCIS Spokesman Zach Kahler said in a statement, according to CBS News. However, the two broad terms are not defined, not the US authorities have elaborated on who would qualify or be granted exemptions under the modification.*

*Those foreign nationals staying in the US on tourist, work or temporary visas could earlier apply for a Green Card without leaving. itted the foreign nationals, including Indians staying under H-1B visa, who could stay in the US while waiting for years for their green card backlogs. The new move instructed officials to default to consular processing - requiring applicants to return to their home country and apply through a US embassy or consulate - rather than applying from within the US.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.